# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2015 ஜனவாரி மாதம் 20 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**IV.** மனுக்கள்

**V.** கேள்விகள்

**01.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் கௌரவ போக்குவரத்து ,விளையாட்டு ,இளைஞர் விவகாரம் ,மகளிர் விவகாரம் ,உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை ,கூட்டுறவு அபிவிருத்தி ,வீட்டுப் பொருளாதார மேம்பாடு ,கடற்றொழில் ,கிராம அபிவிருத்தி ,சுற்றுலாத் துறை , முதலீட்டு மேம்பாட்டு இணைப்பு அத்துடன் கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்திஅமைச்சரிடம் 2014.12.01 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**
**(□/vi (1)14/59)**

அ. பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பதவி வெற்றிடங்கள் தொடர்பாக நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03 இன் மூலம் இவ் வருடத்திற்காக 06 வகையைச் சேர்ந்த பதவிகளுக்காக விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டனவா ?

ஆ. அவ் ஒவ்வொரு பதவிகளுக்குமாக விண்ணப்பித்த உள்வாரியான விண்ணப்பதாரிகளின் பெயர்களை முன்வைத்து நேர்முகப் பரீட்சையில் அவர்கள் வெவ்வேறாகப் பெற்றுக் கொண்ட புள்ளிகளை இச் சபைக்கு முன்வைக்க இயலுமா ?

இ. இல்லையாயின் ஏன் ?

ஈ. உரிய நேர்முகப் பரீட்சையின் போது பாரதூரமான அநீதி மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. அவ்வாறு அறிந்தால் அது என்ன ? எவருக்காக ?

ஊ. விடயப் பொறுப்பு அமைச்சராக இப் பாரதூரமான மோசடியான செயற்பாட்டை திருத்த எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**02.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் 2014.12.01 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**
**(□/vi (1)14/62)**

அ. மேல் மாகாணத்தினுள் எத்தனை அடகு பிடிக்கும் தாபனங்கள் நடாத்தப்படுகின்றன ?

ஆ. இவ் வியாபார நிலையங்களின் பெயர்களை மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் மட்டத்தில் வெவ்வேறாக காட்ட நடவடிக்கை எடுப்பீர்களா ?

இ. அனுமதிப் பத்திரம் இன்றி நடாத்தப்படும் அடகு பிடிக்கும் தாபனங்கள் காணப்படுகின்றன என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. ஒவ்வொரு பிரதேச செயலாளர் மட்டத்திலும் அனுமதிப் பத்திரம் இன்றி நடாத்தப்படும் தாபனங்கள் யாவை ?

உ. அத்தாபனங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

ஊ. அத் தாபனங்கள் தொடர்பாக நீங்கள் மற்றும் உங்களின் கீழ் காணப்படும் தாபனங்கள் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

எ. அடகு தாபனங்களுக்குரிய வருடாந்த அனுமதிப் பத்திரங்களின் மூலம் இவ் வருடத்தினுள் கிடைக்கப் பெற்றுள்ள வருமானம் எவ்வளவு ?

ஏ. 2015 ஆம் ஆண்டின் வருடாந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையில் வருமானப் பெறுகையின் கீழ் இத் தாபனங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவு ?

ஒ. அந் நிதியினை அறவிட்டுக் கொள்ள உத்தேசித்துள்ள வேலைத் திட்டம் யாது ?

**03.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் 2014.12.01 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**

**(□/vi (1)14/63)**

அ. மினுவங்கொட, நீர்கொழும்பு, களனி, களுத்துறை, ஹொரண மற்றும் மத்துகம ஆகிய கல்வி வலயங்களுக்கு உரிய மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை வலய மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவு ?

ஆ. அப் பாடசாலைகளின் 2,3,4 மற்றும் 5 ஆம் தரங்களில் எழுத்துக்களை எழுத மற்றும் வாசிக்க முடியாத மொத்த மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு ?

இ. பாடசாலை மற்றும் தரங்களுக்கு இணங்க வாசிக்க மற்றும் எழுத முடியாத எண்ணிக்கை தொடர்பான அறிக்கை ஒன்றினை ஒவ் ஒவ்வொரு வலய மட்டத்திலும் பெற்றுக் கொடுப்பீர்களா ?

ஈ. அப்படி இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபைக் கூட்டம்

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

"இன்றைய தினம் கலைந்து சென்ற பின் இச் சபையானது **2015 பெப்ரவரி மாதம் 02 ஆந் திகதி (திங்கட் கிழமை) மு.ப. 09.30 க்கு** கூட வேண்டியதுடன் 2015.02.03 ஆந் திகதி சபைக் கூட்டம் நடைபெறாத தினமாகக் கருதிச் செயற்பட வேண்டும்."

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ சுனில் வடகல அவர்கள்**

"ஒன் லையின் அதிர்ஷ்ட இலாபமீட்டு வியாபாரம் 2014 ஏப்ரல் மாதம் முதலாவது வாரம் தொடக்கம் நடைமுறைக்கு வருவதுடன் அதன் தலைமையகம் கொழும்பு 02 நவம் மாவத்தை யில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது மேலும் நாடு பூராகவும் அவ்வாறான நிலையங்கள் 3000 த்தினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இது அதிர்ஷ்ட இலாபம் என்ற போர்வையிலான சூது ஒன்றாகுவதுடன், எங்கள் நாட்டின் இளைஞர்கள் வேகமாக அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர் இதனூடாக லொட்டோ மற்றும் ஜெக்பொட் ஆகிய விளையாட்டுக்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதும் வீட்டில் இருந்தும் கூட இவ் அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் பங்குபற்றக் கூடியதாக இருப்பதும், இதில் காணப்படும் பயங்கரமான விடயமாகும். இந்த அழிவில் இருந்து மேல் மாகாண மக்களை மீட்டெடுப்பது மாகாண சபையின் முக்கிய கடமையும், பொறுப்பும் ஆகிய படியால் இவ்வாறான வியாபாரங்களுக்கு உதவி ஒத்தாசைகளை எல்லா பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களும்,

மற்றும் தாபனங்களும் வழங்காமல் இருக்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது."

**(பி/vi (1)14/06)**

02. கௌரவ எம். ரோஸ் பிரணாந்து அவர்கள்

மேல் மாகாணத்தில் அமைந்துள்ள சில நீதிமன்ற அதிகார எல்லைகளை மீண்டும் நிர்ணயம் செய்து புதிய நீதி மன்ற வலயங்களாக ஒதுக்குவதற்கும், அதற்கிணங்க கடமைகளையும் பொறுப்புக்களையும் ஒப்படைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ள போதும் அதில் ஒழுங்கான முறை ஒன்றினை கடைப் பிடிக்காததினால் மக்களுக்கு பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க ஏற்பட்டுள்ளதுடன் பெருமளவான பணம் வீண் விரயமாவதும் இடம் பெறுகின்றது மக்களுக்கும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், அதேபோல் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கும் சமீபமாக நீதிமன்றம் ஒன்று காணப்படும் போது வாகனத்திற்காக எண்ணெயைச் செலவு செய்து தூரத்தில் அமைந்துள்ள நீதிமன்றங்களுக்கு பயணிக்க வேண்டியுள்ளது. எனவே இவ் எல்லா விடயங்களையும் ஒழுங்கான மேற்பார்வைக்கு உட்படுத்தி, முறையான அனுபவம் உள்ள உத்தியோகத்தர்களைக் கொண்ட குழாம் ஒன்றின் மூலம் இலங்கையினுள் நீதி மன்ற அதிகார எல்லைகளை மீண்டும் நிர்ணயம் செய்வதை ஒழுங்கான முறையில் மேற்கொள்ள வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi (1)14/07)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.01.05 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.